**தமிழ்நாடுபள்ளிக் கல்வி இயக்குநரின் செயல்முறைகள், சென்னை–600 006.**
**ந.க.எண்.34785/எம்/இ1/2023நாள்: 11 .09.2023**

**பொருள்** : பள்ளிக்கல்வி – பள்ளி மன்ற செயல்பாடுகள் – சிறார் திரைப்படம் திரையிடுதல் –செப்டம்பர்2023 – அரசு நடுநிலை, உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் பயிலும் 6–9 வகுப்பு மாணவர்களுக்கு திரையிடுதல் – வழிகாட்டும் நெறிமுறைகள்வழங்குதல் – சார்ந்து.

**பார்வை** :
1. தமிழ்நாடு பள்ளிக் கல்வி ஆணையர் மற்றும் தொடக்கல்வி இயக்குநரின் இணை செயல்முறைகள் ந.க.எண்:019528/எம்/இ1/2022, நாள் 19.05.2023.
2. தமிழ்நாடு பள்ளிக் கல்வி ஆணையர் மற்றும் தொடக்கல்வி இயக்குநரின் இணை செயல்முறைகள் ந.க.எண்:34785/எம்/இ1/2023, நாள் 19.07.2023.
3. தமிழ்நாடு பள்ளிக் கல்வி ஆணையர் மற்றும் தொடக்கல்வி இயக்குநரின் இணை செயல்முறைகள் ந.க.எண்:34785/எம்/இ1/2023, நாள்09.08.2023.

**********

பார்வையில் காணும் செயல்முறைகளின்படி அரசு நடுநிலை, உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் பயிலும் 6–9 வகுப்பு மாணவர்களுக்கு ஜூலை 2023 மற்றும் ஆகஸ்ட் 2023 ஆகிய மாதங்களில் தி எக்ஸ்ரா டெரஸ்ட்ரியல் மற்றும் நிலா ஆகிய சிறார் திரைப்படங்கள் திரையிடப்பட்டது. மாணவர்கள் தங்களை சுற்றியுள்ள உலகத்தை புரிந்துகொள்ளவும், பல்வேறு கலாசாரங்களின் தனித்தன்மையினை அறியவும், பாலினவேறுபாடு, நம்பிக்கை, இரக்கம், நட்பு, குழுபங்கேற்பு போன்ற நற்பண்புகளை அடையாளம் காணவும், மாணவர்களின் படைப்பாற்றல் மற்றும் விமர்சன சிந்தனையினை வெளிக்கொணர்வதும் திரைப்படங்கள் திரையிடலின் முக்கிய நோக்கமாகும்.

இதனைத் தொடர்ந்து செப்டம்பர்–2023க்கு திரையிடப்படவுள்ள திரைப்படம் **'ஹருண்–அருண்'** என்கின்ற குஜராத்தி திரைப்படம் (வசனங்கள் அனைத்தும் தமிழ் துணையுரையுடன்) ஆகும். இத்திரைப்படத்தின் கதைச்சுருக்கம், திரையிடலுக்கு

பின்பற்ற வேண்டிய நிகழ்ச்சி, திரைப்படம்திரையிட்டபின்உரையாடவேண்டியவை, மற்றும்Spotlight வினாக்கள் பின்வருமாறு வழங்கப்படுகிறது.

I. சிறார் திரைப்படத் திரையிடல் அமர்விற்கான நிகழ்ச்சி நிரல்

படம்: (ஹருண்அருண் –)காலஅளவு: 73நிமிடங்கள் (சிறப்புஅழைப்பாளர்களுடன்)

| வ .எண் | காலஅளவு(நிமிடங்கள்) | செயல்பாடுகள் | நடத்தக்கூடியவர் / உறுதிசெய்பவர் |
|---|---|---|---|
| 1. | 10 | படம் திரையிடுவதற்கு வகுப்பறை தயாராக உள்ளதா? என்பதை உறுதிப்படுத்துதல் | பொறுப்பு ஆசிரியர் |
| 2. | 10 | திரைப்படம் திரையிடப்படும் அறையில் அனைத்து குழந்தைகளையும் கூட்ட வேண்டும் | வகுப்பு ஆசிரியர்கள் உதவியுடன் பொறுப்பு ஆசிரியர். |
| 3. | 5 | சிறப்புஅழைப்பாளர்அறிமுகம் (சிறப்பு அழைப்பாளர் திரைப்படம் தொடங்கும் முன்னரே வருவதை உறுதிப்படுத்தி கொள்ளவும்) | த.ஆசிரியர்/ பொறுப்பு ஆசிரியர் |
| 4. | 5 | படத்தின்அறிமுகம் (கதைசுருக்கம்) (இணைப்பு – 2) | பொறுப்பு ஆசிரியர் |
| 5. | 75 | படம் திரையிடல் | பொறுப்பு ஆசிரியர் |
| 6. | 10 | சிறப்பு அழைப்பாளர் உரை | பொறுப்பு ஆசிரியர் அறிமுகப்படுத்தி பேச அழைத்தல் |
| 7. | 5–10 | கருத்து கேட்பு அமர்வு | 2 – 3 குழந்தைகள் பேசுவார்கள் |
| 8. | 15 | ஸ்பாட்லைட் கேள்விகள் (Spotlight) (*Spotlight* கேள்விகளுடன் சேர்த்து மாணவர்களின் ஆர்வத்தை தூண்டும் வகையிலான கேள்விகளை கேட்டு உரையாடல்களை நிகழ்த்தலாம்). | பொறுப்பு ஆசிரியர் (ஒரு பெரிய குழுவாக இருந்தால் பிற ஆசிரியரின் உதவியை பெறலாம்) |
| 9. | 5 | நன்றிஉரை | பொறுப்பு ஆசிரியர் அல்லது தலைமை ஆசிரியர் |

II. <u>**கதைச்சுருக்கம்– ஹருண்அருண்–**</u>




ஹருண்–அருண் திரைப்படத்தை இயக்கியவர் வினோத் கணத்ரா. இது குஜராத்தி மொழியில் எடுக்கப்பட்ட திரைப்படம் ஆகும். ஒரு மணி நேரம் 13 நிமிடங்கள் ஓடும் இத்திரைப்படத்தை தயாரித்தது இந்திய குழந்தைகள் திரைப்பட சங்கம் (Children's Film Society, India). 'ஹருண்', பாகிஸ்தானில் இஸ்லாமிய மத நம்பிக்கைகளை பின்பற்றும் சிறுவன். ஹருண் தனது தாத்தாவுடன் அவரது நண்பரை சந்திக்க குஜராத்தில் உள்ள கட்ச் பாலைவன எல்லை வழியாக இந்தியாவுக்குள் நுழைகிறான். அந்த பயணத்தில் தனது தாத்தாவிடமிருந்து பிரிந்து, குழந்தைகள் நிறைந்த ஒரு குடும்பத்தில் தஞ்சமடைகிறான், அவன் பெயரை 'அருண்' என்று தவறாக புரிந்துகொள்கிறார்கள். ஹருண் தனது அன்பாலும் தைரியத்தாலும் அக்குடும்பதையும் கிராமத்தையும் வெல்கிறான். ஆனால், அவன் பாகிஸ்தானை சேர்ந்தவன் என கண்டுபிடிக்கப்பட்டபோது, அவனது மதத்தின் அடிப்படையில் கிராமபெரியவர்களால் சந்தேகிக்கப்படுகிறான். இச்சூழல் உருவாக்கிய சவால்கள் மற்றும் எல்லா பாகுபாடுகளையும் கடந்து அவனது அன்பு வெல்ல முடியுமா? என்பதே இக்கதை. நட்பும், தாய்மையும், குழந்தைகளின் மனமும் பாகுபாடுஅறியாதது; வேறுபாடு காணாதது எனும் உண்மையை உணர்வு ரீதியாக பார்ப்பவர்களுக்குள் ஏற்படுத்துகிறது.

**பெற்ற விருதுகள்:**

1. அமைதிக்கான விருது – சிக்காகோ சர்வதேச குழந்தைகள் திரைப்பட விழா
2. சிறந்த இளையோருக்கான விருது (Best Junior award)– டாக்கா சர்வதேச திரைப்பட விழா – பங்களாதேஷ்
3. டிரான்ஸ்மீடியா விமர்சகர்கள் ஜூரி விருது – மும்பை
4. ஆசிய ஒளி விருது – புத்தத் திரைப்பட விழா – இலங்கை
5. மனிதநேய விருதுக்கான சிறப்பு குறிப்பு – ரிமோஸ்கி சர்வதேச திரைப்பட விழா – கனடா
6. சிறந்த ஆடை வடிவமைப்பு விருது – 29வது ஆக்பர்க் குழந்தைகள் திரைப்பட விழா, ஜெர்மனி

**III. திரைப்படம் திரையிட்டபின் உரையாட வேண்டியவை– கருத்துக் கேட்பு அமர்வு**

1. இந்த திரைப்படம் உங்களுக்கு பிடித்திருக்கிறதா?
2. இத்திரைப்படத்தின் மூலக்கரு/மையக் கருத்து என்ன /?
3. கதை எதைப் பற்றியது அல்லது யாரைப் பற்றியது? அதை எப்படி அறிந்தீர்கள்?
4. கதையில் நிகழும் மிக முக்கியமான சம்பவங்கள் என்னென்ன?
5. எந்த கதாப்பாத்திரம் உங்களை மிகவும் கவர்ந்துள்ளது?
6. திரைப்படத்தின் வாயிலாக தாங்கள் கற்றுக்கொண்ட முக்கிய கருத்துகள் என்னென்ன?
7. இப்படத்திற்கு வண்ணங்கள் எவ்வாறு முக்கியத்துவம் அளிக்கிறது?
8. இப்படத்திற்கு இசை அல்லது ஒலி எவ்வாறு முக்கியத்துவம் அளிக்கிறது?
9. எந்த ஒரு கதாப்பாத்திரத்திற்கு நீங்கள் பின்னனிக்குரல் கொடுக்க விரும்புவீர்கள், அப்படி இருப்பின் நீங்கள் என்ன சொல்வீர்கள்?
10. இத்திரைப்படத்தை பற்றி உங்கள் நண்பர்களுடன் உரையாடுவீர்களா, மற்றும் அவர்கள் இப்படத்தை காண சொல்வீர்களா? ஏன்?
11. இத்திரைப்படம் பற்றி உங்களின் எண்ணங்களை 2 வரிகளில் எழுதுக.

**IV. Spotlight – வினாக்கள்**

1. கதையின் தொடக்கத்தில், இடையில் மற்றும் முடிவில் என்ன நடக்கிறது?
2. இந்த கதை எந்த இடத்தில் நடக்கிறது?
3. இந்த கதை எங்கு நடக்கிறது என்று எப்படி அறிவது?
4. திரைப்படத்தில் ஒன்றுக்கும் மேற்பட்ட முக்கிய கதாபாத்திரங்கள் உள்ளனவா?

5. இக்கதை முக்கிய கதாபாத்திரத்தை தழுவி உள்ளதா அல்லது பிறரை பற்றியதா?
6. எந்த கதாப்பாத்திரத்திற்காவது குறிப்பிட்ட இசை அல்லது ஒலி கொடுக்கப்பட்டுள்ளதா?
7. எந்த ஒரு குறிப்பிட்ட கதாபாத்திரத்திற்காவது குறிப்பிட்ட வண்ணம் / தொடர்புடையதாக உள்ளதா வண்ணங்கள்?
8. கதையின் தொடக்கத்தில் நாம் எங்கிருந்தோம் என்று நினைக்கிறீர்கள்?
9. இந்தக் கதை எப்போது நிகழ்கிறது எனக் கூற முடியுமா? இந்த கதை கடந்த காலத்தை சார்ந்ததா அல்லது நிகழ்காலத்தைச் சார்ந்ததா என்பதை எப்படி அறிவீர்கள்?
10. இத்திரைப்டத்தின் முழு கருத்தையும் மூன்று நிமிடங்களில் உங்களால் நடித்துக் காட்ட முடியுமா?

சிறப்பு அழைப்பாளர் அவர்கள்(எழுத்தாளர்/திரைத்துறை ஆர்வலர்/ நடிகர்/ திரைப்படத்தில் ஆர்வமுள்ள மற்ற பள்ளி ஆசிரியர்கள் திரையிடலுக்கு பின் மாணவர்களோடு உரையாட வருகை தருவதை உறுதி செய்தல் வேண்டும்.பார்வை (2) மற்றும் (3)ல் கூறியுள்ள அனைத்து வழிகாட்டு நெறிமுறைகளையும் தவறாது பின்பற்றி ஹருண்–அருண் திரைப்படத்தினை சார்ந்த மாணவர்களுக்கு பள்ளிகளில் திரையிட்டு காண்பிக்க அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொள்ளுமாறு அனைத்து மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர்களும் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

11.9.2023

பள்ளிக் கல்வி இயக்குனர்

11/9/23

**பெறுநர்**
முதன்மைக் கல்வி அலுவலர்கள், அனைத்து மாவட்டங்கள்

**நகல்**
1. மாநில திட்ட இயக்குநர், ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி, சென்னை–600006.
2. இயக்குநர், தொடக்க கல்வி இயக்குநரகம், சென்னை–600006.